Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# தமிழ் கல்வெட்டுகளில் இசைக்கலை
# Art of Music as Gleaned from Tamil inscriptions

முனைவர் மா. பவானி, இணைப்பேராசிரியர்
கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

72

**முன்னுரை**

இசையால் மயங்காத இதயமுண்டோ! இசை இருவகைப்படும். கருவிப்பாட்டிசை, வாய்ப்பாட்டிசை. இறைவனை இசையால் பாடுவது ஒருமுறையெனில் இறைவனே இசைவடிவமாக இருக்கிறான் என்பதை "பண் ஆவனே பண்ணின் திறமும் ஆவனே" என்ற தேவார வரிகள் உணர்த்துகின்றன. (தேவாரம் 7 51 10 ). பாடுகிற அறிவு பெற்றவர்கள் வேதங்கள், மந்திரங்கள் போன்றவற்றை அடியொட்டிப் பாடினர். இலக்கியத்தில் இசைக்கூறுகள் குறித்த ஆய்வுகள் ஆய்வுலக்கில் கடல்போன்றுள்ளது. ஆனால் கல்வெட்டுக்களில் கூறும் இசைக்கூறுகளைப் பற்றிய ஆய்வுகள் அருகியேவுள்ள நிலையில் கல்வெட்டியலைப் பயில்வதில் இன்னும் ஒரு மாணவி என்ற நிலையில் கல்வெட்டுகள் கூறும் இசைக்கலைச் செய்திகளை இக்கட்டுரை தொகுத்தளிக்கிறது.

இசைப்பற்றிய முதல் குறிப்புகள் பொ.ஆ.4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அரச்சலூர் கல்வெட்டிலேயே கிடைக்கிறது. இக்கல்வெட்டில் நடனமாடும் போது நட்டுவாங்கம் வாசித்துக்கொண்டே பாடும் வாய்ப்பாட்டுக் கலைஞர் பயன்படுத்தும் 'தா,தை,தா,தை' போன்ற இசைக்குறிப்புகளோடு கா, கீ, கை போன்ற எழுத்துகளும் இடம்பெற்றுள்ளன. இவ்விசைக்குறிப்புகளைத் தொகுத்த கலைஞரின் பெயர் தேவன் சாத்தன் என்பதாகும். 'எழுத்தும் புணருத்தான் மலைய் வண்ணக்கன் தேவன் சாத்தன் என்பது அக்கல்வெட்டு வாசகமாகும்.' (Iravatham Mahadevan,2003,p. 21) இக்கல்வெட்டு கி.பி. 4காம் நூற்றாண்டென காலம் கணிக்கப்பெற்றுள்ளது. தமிழியிலிருந்து வட்டெழுத்துக்கு மாறும் (transitional period tamilzi - vatteluttu) நிலையில் எழுத்துகள் பொறிக்கப்பெற்றுள்ளன.

பொ.ஆ. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த குடுமியான்மலைக் கல்வெட்டு மகேந்திரவர்மன் காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்பெறுகிறது. இக்கல்வெட்டில் முழுக்க முழுக்க சமஸ்கிருத ஸ்வரங்கள் அமைக்கப்பெற்ற இசைப்பாடலே கல்வெட்டாக அமைந்துள்ளது. ஒவ்வொரு பாடலும் என்ன ராகத்தில் அமையவேண்டும் என்பதும் இதில் குறிப்பிடப்பெற்றுள்ளது. இதில் சங்கீர்ண ஜதி என்ற ஒரு ஜதியின் பெயர் குறிப்பிடப்பெற்றுள்ளது. முதலாம் மகேந்திரவர்மன் இசைக்கலையில் வல்லவன் என்பதை இது நிரூபிக்கும் வகையில் உள்ளது.

இக்கோயிலின் கருவறையின் வெளிப்புறம் கிரந்த எழுத்தில் 'பரிவாதிகிநி' என்று பொறிக்கப்பெற்றுள்ளது. இதை வீணையைப்போன்று ஒரு இசைக்கருவியாகும். கல்வெட்டில் 'இது எட்டுக்கும் ஏழுக்கும் உரியது' என்ற தொடர் இடம்பெறுகிறது. இதை அறிஞர்கள் 7 மற்றும் 8 நரம்பிணையுடைய வீணையில் இப்பாடலை வாசிக்க க்கூடும் என்று குறிப்பிடுகின்றனர். (*IPS*:nos.1-

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

3)

பல்லவ அரசர் காலந்தொட்டே தமிழகக் கோயில்களில் தேவாரம் இசைக்கப்பட்டுள்ளது. திருவல்லம் கல்வெட்டு சிவன்கோயில் ஒன்றில் திருப்பதியம் பாடப்பெற்றதைக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டுகளில் மூன்று கல்வெட்டுகள் நந்திவர்மன் காலத்தைச் சேர்ந்தவை. இதுவே கல்வெட்டுகளில் திருப்பதியம் பாடுவது பற்றிக் குறிப்பிடும் முதல் கல்வெட்டாகும். (*SII*,vol. III, no.43) சோழர் கல்வெட்டுகளில் தேவாரத்திருப்பதிகங்களில் , திருவாய்மொழி (*ARE,* 1916,no.393), திருவெம்பாவை (*ARE,* 1921,no.343;1912:no427)திருத்தாண்டகம் (*ARE,* 1917, no.219)ஆகியன பாடியமைக்கான சான்றுகள் உள்ளன.

தஞ்சாவூர் பெரியக்கோயிலில் (48 + 2) 50 பேர் திருப்பதியம் பாடுவோர் முதலாம் இராஜராஜ சோழனால் நியமிக்கப்பெற்றுள்ளனர்.

கல்வெட்டுக்களில் இவர்களில் 48பேர்கள் திருப்பதியம் விண்ணப்பஞ்செய்வார் எனவும் பிடாரர்கள் எனவும் குறிப்பிடப்பெறுகின்றனர். மீதமுள்ள இருவருள் ஒருவர் உடுக்கைக் கொட்டுபவரும், இன்னொருவர் மத்தளம் வாசிப்பவரும் ஆவார். (*SII*,vol. II, no.65)

**கல்வெட்டு வாசகம்**

23. உடையார் ஸ்ரீ ராஜாராஜீஸ்வரம் உடையார்க்குத் திருப்பதியம் விண்ணப்பஞ்செய்ய உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் குடுத்த பிடாரர்கள் நாற்பத்தெண்மரும், இவர்களில் நிலையாய் உடுக்கை வாசிப்பான் ஒருவரும்.

33. இவர்களிலே நிலையாய்க் கொட்டிமத்தளம் வாசிப்பான் ஒருவரும் ஆக ஐம்பதின்மர்க்குப் பேரால் நிசதம் நெல்லு முக்குறுணி நிவந்தமாய் ராஜகேஸரியோடொக்கும் ஆடவல்லானென்னும் மரக்கலால் உடையார் உள்ளூர்ப் பண்டாரத்தேய்ப் பெறவும்

இவர்களில் செத்தார்க்கும் அனாதேசம் போனார்க்குந் தலைமாறு அவ்வவர்க்கு அடுத்த முறை கடவார் அந்நெல்லுப் பெற்றுத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்யவும்.

அவ்வவர்க்கு அடுத்த முறை கடவார் தாந்தாம் யோக்யர் அல்லாதுவிடில் யோக்யராயிருப்பாரை ஆளிட்டுத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்வித்து அந்நெல்லுப் பெறவும்.

அவ்வவர்க்கு அடுத்த முறை கடவாரின்றி யொழியில் அந்த நியாயத்தாரே யொக்யராயிருப்பாரைத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய இட்டு இட்ட அவனே அவ்வவர் பெறும்படி நெல்லுப் பெறவும்.

ஆக இப்படி உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் திருவாய் மொழிந்தருளியபடி கல்லில் வெட்டியது.

மேற்கண்ட கல்வெட்டு வரிகள் மூலம் இவர்கள் பரம்பரையாக நியமிக்கப்பெற்றிருப்பதை அறியலாம். இவர்கள் பிடாரர்கள் என்று அழைக்கப் பெறுகின்றனர்.

பிடாரர் என்றால் இசைத்துப் பாடுபவர்கள் என்று பொருள். (எ.சுப்பராயலு, 2003, ப. 26)

ஒருவர் இறந்தாலோ அல்லது வேறோரு ஊருக்கு ஓடிப் போய் விட்டாலோ அவரது வாரிசுகளில் தகுதியுடையோர் அப்பணியைத் தொடர வேண்டும். ஒரு நாளைக்கு குறுணி நெல் என இவர்களுக்கு கூலி வழங்கப்பெற்றுள்ளது.

அந்த நெல் ராஜகேசரி என்ற அளவையோடு ஒத்த அளவையுடைய ஆடவல்லான் என்னும் மரக்கலால் அளக்கப் பெற்றிருக்க வேண்டும்.

இக்கூலி நெல்லை இவர்கள் கோயிலில் உள்ள பண்டாரத்திலேயேப் பெற்றுக்கொள்ளலாம். குறுணி என்பது தற்பொழுதிருக்கும் மரக்காலுக்குச் சமமானது. அரசர் தனியே வழிபடும் வீட்டுக் கோயிலும், தேவாரம் என்றே அழைக்கப் பெற்றுள்ளது. (*SII*,vol. VIII, no.749) நடனமாடும் பெண்களைக் காட்டிலும், இசைப்பாடும் பெண்கள் உயர்ந்தவர்களாகக் கருதப்பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளனர். (அ. கிருட்டினன், 1993,ப.169)

திருவிழா நாட்களில் போட்டிகள் நடத்தப்பெற்று அதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கியுள்ளனர்.

இவ்விதம் பரிசுகள் வழங்குவதற்கும் நிலக்கொடை வழங்கி அதிலிருந்து வரும் வட்டியைகொண்டு பரிசு வழங்கவேண்டுமாய் கோரப்பட்டுள்ளது. *(ARE,* 1923, no.266)

1. நட்டவஞ்செய்ய நட்டவம் ஒன்றுக்கு அரையன் சுந்தரசோழனான மும்முடி சோழ நிருத்தமாராயனுக்கு பங்கு இரண்டும்
2. குமரன் வடவாயிலான மும்முடிசோழ நிருத்தப் பேரையன்
3. விக்கி பட்டாலகன்
4. அரையன் அபிமான தொங்கனான அருமொழி நிருத்தப்பேரையன
5. மல்லன் இரட்டையன்
6. அரையன் மணஞ்சேரியான வகையிலி நிருத்தப் பேரையன்

மே......வியம் (மோரவியம் என்னும் இசைக்கருவியாக இருக்கலாம்)

1. அரையன் ராஜ ஸ்ரீயனான நித்தவினோத வாத்யமாராயன்
2. அரையன் நின்ற நாராயணன்.

**வீணை வாசிப்பார்**

1. சுப்ரமண்யன் கூத்தனான செம்பியன் வீணை ஆதித்தன் (இவன் செத்தமையில் இவன் மகளைக் கொண்ட 2. அரையன் சதாசிவன்

வாய்ப்பாட்டுக் கலைஞர்கள்

வாய்ப்பாட்டுக் கலைஞர்களிலும் ஆரியம் பாடுவார், தமிழில் பாடுவார் என்ற இருபிரிவினர் இருந்துள்ளனர். கானபாடி என்ற கலைஞர்களும் குறிப்பிடப்பெற்றுள்ளனர். கூத்திலும் ஆரியக்கூத்து, தமிழ்க்கூத்து என்ற இருவகை இருந்துள்ளன. சோழர் காலத்தில் தமிழோடு சமஸ்கிருதமும் பாடப்பட்டுள்ளது. ஆனால் இன்று தமிழோ கருவறைக்கு வெளியே பாடுகிறது. அது இறைவன் தூங்கும்போது. இன்று அரசு கலைஞர்களுக்கு குடியிருப்புகள் அமைத்து தருவதுபோல் குடியிருப்பு ஏற்படுத்திக்குடுத்துள்ளனர்.

பங்கு என்ற பெயரில் ஆண்டொன்றுக்கு 100கலம் நெல் விளையும் அளவிற்கு உள்ள நிலத்தை கொடை ஊதியமாக வழங்கப்பெற்றுள்ளது. ஒரு பங்கு என்பது ஒரு வேலி நிலமாகும் . ஒரு வேலி நிலத்திலிருந்து ஆண்டொன்றுக்கு 100கலம் நெல் விளையும் என்று கணக்கிடப்பெற்றுள்ளது. இந்த நிலத்தோடு அதன் விளைச்சலும் இவர்களுக்கு கூலியாக வழங்கப்பெற்றுள்ளது. அக்காலத்திலும் கலைஞர்கள் நாடுவிட்டு நாடு சென்றுள்ளனர். அவ்விதம் அனாதேசம் சென்றுவிட்டாலே அல்லது இறந்துவிட்டாளோ அவர்களது வாரிசுகளுக்கு அப்பணி வழங்கப்பெற்று ஊதியமும் வழங்கப்பெற்றுள்ளது. ஆனால் அவர் ஒழுக்கமுள்ளவராய் விளங்கவேண்டும் என்ற குறிப்பு உள்ளது. இவ்விதம் இல்லையெனில் அந்தந்த நியாயங்களிலாரே அந்தந்த குழுவில் உள்ளோரே வேறொருவரைத் தேர்வு செய்யலாம் என்றுள்ளது.

**தஞ்சாவூர் இராஜராஜீஸ்வரத்து திருப்பதியம் விண்ணப்பஞ்செய்வார்**

1.பாலன் திருவாஞ்சியத்தடிகளான ராஜராஜ பிச்சனான ஸதாசிவன் 2.திருவெண்ணாவல் செம்பொற்சோதியான தக்ஷிணமேருவிடங்க பிச்சனான ஞானசிவன் 3. பட்டாலகன் அம்பலத்தாடியான மனோத்ம சிவன் 4.பட்டாலகன் சீருடை கழலான பூர்வசிவன் 5. பொற்சுவரன் திருநாவுக்கரையனான ஆரூரான தர்மசிவன் 6.செட்டி எடுத்த பாதமான கவசசிவன் 7.இராமன் சம்பந்தனான சத்யசிவன் 8.அம்பலவன் பக்தர்கள் …………னான வாமசிவன் 9.கம்பன் திருநாவுக்கரையனான சதாசிவன் 10. நக்கன் சீராளனான வாமசிவன் 11.அப்பி திருநாவுக்கரையனான நேத்ரசிவன் 12.சிவகொழுந்து சீராளனான தர்மசிவன் 13.ஐஞ்நூற்றுவன் வெண்காடனான சத்தியசிவன் 14.அரையன் அணுக்கனான திருமறைக்கா ……….னான தர்மசிவன் 15. அரையன் அம்பலக்கூத்தனான ஓங்கார சிவன் 16. ஆருரன் திருநாவுக்கரையனான ஞானசிவன் 17. கூத்தன் மழலைச் சிலம்பான பூர்வசிவன் 18..ஐஞ்ஞூற்றுவனான சீயாரூரான தத்புருஷ சிவன் 19. சம்பந்தன் ஆரூரனான வாமசிவன் 20. அரையன் பிச்சனான தர்ம்ம சிவன் 21. காஸ்யபந் எடுத்தப்பாதப்பிச்சனான உருத்ரசிவன் 22. ஸுப்ரமண்யந் ஆச்சனான தர்ம்மசிவன் 23. கூத்தன் அமரபுஜங்கநான ஸத்யசிவன் 24. வெண்காடனான அகோரசிவன் 25. மாதேவன் திருநாவுக்கரையனான விஞ்ஞானசிவன் 26.கூத்தன் வெண்காடனான ருத்ரசிவன் 27. ஐஞ்ஞூற்றுவன் திருவாய்மூரான அகோரசிவன் 28. திருமலைக்கூத்தனான வாமசிவன் 29. ஐஞ்ஞூற்றுவன் டுத்தப்பாதமான தர்மசிவன் 30. அரையன் தில்லக்கரைசனான பூர்வசிவன் 31.காளி சம்பந்தனான தர்மசிவன் 32. காபாவிகவாலியான ஞானசிவன் 33.வெண்காடன் நமஸ்ஸிவாயமான உருத்ரசிவன் 34. சிவானந்தனான உருத்ரசிவன் 35. சிவக்கொழுந்து சம்பந்தனான தர்ம்மசிவன் 36. இராமன் கணவதியான ஞாநசிவன் 37. பிச்சன் வெண்காடனான அகோரசிவன் 38. மறைக்காடன்நம்பி ஆரூரனான ஞானசிவன் 39. சோமன் சம்பந்தனான ஞானசிவன் 40. சத்தி திருநாவுக்கரையனான ஈஸானசிவன் 41. பொற்சுவரன் நம்பியாரூரனான தர்ம்மசிவன் 42. ஆச்சன் திருநாவுக்கரையனான நேத்ரசிவன் 43. ஐயாறன் பெண்ணோர்பாகனான ஹ்ருதயசிவன் 44. ராஜாதித்த அம்பலத்தடியான சிகாசிவன் 45. செல்வன் கணவதி தெம்பனான தர்ம்மசிவன் 46.தில்லைக்கூத்தனான ஞானசிவன்

**ஆரியம் பாடுவார்**

1.அரையன் அம்பலநாதன் ஆன செம்பியன் வாத்யமாராயன்

(வாத்யம் வாசித்துக்கொண்டே பாடுவதாக இருக்கலாம்)

1) பட்டலகன் காமப் பேரையன
2) அமுதன் காளி
3) வாணராசி கூத்தன்
4) அரையன் சூற்றி

**கொட்டி மத்தளம்**

1) காந்தர்வ தாசன்
2) காந்தர்வ துறைக் கவாளி

சங்கு ஊதுபவர்

1) ஊத தயிலன் விக்கியண்ணன்

2) மும்முடிசோழத்தெரிந்த ஆனைப்பாகரில் சூற்றிநாதன்
3) தஞ்சாவூர் எரியூர் நாட்டுத் தனி உவைச்சன் பொற்காளி தொண்டயன்

**பக்க வாத்யர்**

1. அழகிய சோழத்தெரிந்த வலங்கை வேலைக்காரரில் ஐயாரன் அந்தரி
2. க்ஷத்ரிய சிகாமணித் தெரிந்த வலங்கை வேலைக்காரரினல் சத்தி ஆரூரன்
3. நித்த வினோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்துக் கருகாவூர்ப் பாதசிவன் ஆச்சன் பிச்சன்
4. வீரசோழ அணுக்கரில் காமன் ஐயாறன்
5. சத்து புஜங்கத் தெரிந்த வலங்கை வேலைக் காரரில் சத்தி பொன்னன்
6. கந்தர்வரில் எழுப்பத்தைய்வனல் வாய்க்கும்
7. ராஜகண்டயவத் தெரிந்த வலங்கை வேளைக்காரரில் பட்டாலகன் அம்பலம்
8. கந்தர்வரில் குப்பை திருமணஞ்சேரி
9. தஞ்சாவூர் பிரம்ம குட்டத்து உவைச்சன் ஐயாறன் கண்டராச்சன்
10. ராஜாஜத் தெரிந்த வலங்கை வேளைக்காரரில் வரகுணன் சீராளன்
11. பராந்தகக் கொங்கவாளில் கீர்த்தி நாதன் (இவன் செத்தமையில் இவள் தம்பி
12. கீர்த்தி கிளைத்தாங்கி
13. அரிதுர்க்க லங்கனத் தெரிந்த வலங்கை வேலைக்காரரில் நூற்றெண்மன் சூற்றி இவன் செத்தமையில் இவன் தம்பி
14. நூற்றெண்மன்
15. மூர்த்த விக்ரமாபரனத் தெரிந்த வலங்கை வேளைக்காரரில் மங்கலவன் மாணி
16. இப்படைத்தண்டன் கம்பன்
17. இப்படை ஆரூர் தேவன்
18. மும்முடிச்சோழத் தெரிந்த பரிக்காறரில் கண்டி காளி
19. இரணமுக பீமத்தெரிந்த வலங்கை வேலைக்காரரில் அடிகள் செட்டி
20. நித்த வினோத வளநாட்டு, ஆவூர்க் கூற்றத்துக் கூனர்கள் முன்னியூர் உனவச்சன் களரி ஆச்சன்
21. தஞ்சாவூர்த் தஞ்சை மாமணிக்கோயில் வீரசோழ அணுக்கன் பராந்தகன் வீமன்
22. இவ்வூர் ஐய பீமதளி வீரசோழ அணுக்கன் சுந்தர காலகாலன்
23. இத்தளி வீரசோழ அணுக்கன் பிசங்கன் சீராளன்
24. இத்தளி வீரசோழ அணுக்கன் தேவன் செங்குளவன்
25. விக்ரமாபரணத் தெரிந்த வலங்கை வேளைக்காறரில் இராமன் கம்பன்
26. இளைய ராஜராஜத்தெரிந்த வலங்கை வேளைக்காரரில் ஆச்சன் ஆடவல்லான்
27. ராஜகண்டீயவத்தெரிந்த வலங்கை வேளைக்காராரில் உத்தமன் கூத்தன் தனிச்சேரி பெண்டுகளுக்கும், காந்தர்விகளுக்கும் நாயக்க செய்ய
28. தஞ்சாவூர்ப் பரஞ்சோதி
29. கோவிந்தன் சோமநாதன்

பக்கவாதியருள் பெரும்பாலானோர் படைவீரர்களாகவுள்ளனர். வலங்கைவேளைக்காரர், வீழசோழ அணுக்கன் என்ற அவர்களது பெயர்கள் இதற்குச் சான்றாகும். ஒருவேளை போர் இல்லாத காலங்களில் இவர்கள் கோயில் திருப்பணிகளில் பங்கேற்றிருப்பர் போல் உள்ளது.

**உவைச்சர்**

**நித்தவினோத வளநாட்டு பல்லவ நாட்டு நல்லூரகிய பஞ்சவன் மஹாதேவிச் சதுர்வேதி மங்கலத்து ஐயன்**

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

30. நித்தவினோத வளநாட்டு பல்லவ நாட்டு நல்லூராகிய பஞ்சவன் மாஹாதேவிச் சதூர்வேதி மங்கலத்து ஐயன் பொய்யிலிக்குத் தன்னேற்றம் ஆள் பதினொருவர்க்கு பேராற் பங்கு அரையகப் பங்கு ஐஞ்சரையும்

**சகடை கொட்டி /**சாக்கை

தாமோதிரன் செட்டிக்குத் தன்னேற்றம் ஆள் பதினொருவருக்குப் பேராற் பங்கு அரையாக பங்கு ஐந்தரையும்

1) தாமோதிரன் செட்டிக்குத் தன்னேற்றம் ஆள் பதினொருவருக்குப் பேராற் பங்கு அரையாக பங்கு ஐஞ்சரையும்யும்

2) சகடை கொட்டிகளில் சாத்தன் அம்பலத்துக்கு தன்னேற்றம் ஆள் பதினொருவருக்கு பேரால்பங்கு அரையும்

3)மேற்படிக்கு உள்படுத்தடி மாறும் அரையன் உதையமாத்தாண்டனுக்குத் தன்னேற்றம் ஆள் பதினொருவர்க்கு பேராற் பங்கு அரையாகப் பங்கு

ஐஞ்சரையும் ஆக இவர்களே பாதவக்காணி பெறவும் ஆக இப்படி காணிப்பெற்றுப்பணி செய்யவும். குரவர்க்கு (10) ½ , வண்ணாத்தார் 1 , சாக்கை 1 ½ அபராயதன் வடவாயிலான பல்லவன் சாக்கை வடுவூறிஞ்சி .

**இசைக்கருவிகளும் கலைஞர்களும்:**

உவச்சு, சகடை, சங்கு, நட்டுவாங்கம், பாடவியம், மத்தளம், (மோ(ர)வியம்)?, வங்கியம் (இசைக் குழல்), வீணை போன்ற இசைக்கருவிகள் பயன்பட்டுள்ளன. நாதஸ்வரம் பற்றியக்குறிப்பு இல்லை. இருப்பினும் வங்கியம் என்பதற்கு மூங்கில் என்றும் இசைக்குழல் என்றும் பொருள்கூறுகிறது அகராதி (*தமிழ் அகராதி*,தொ.VI,1982:3453). எனவே நாதஸ்வரம் என்ற சொல்லாட்சிக்கு பதிலாக வங்கியம் குழலோசைக்குப் பயன்பெற்றிருக்கக்கூடும். ஆரியம் பாடுவார், உடுக்கை வாசிப்பார், காந்தர்வர், கானபாடி, கொட்டு மத்தளம் வாசிப்பார் (இது தற்போதுள்ள மத்தளம் அல்ல. கொடுகொட்டி என்ற இசைக்கருவியாகும். இது பற்றியக் குறிப்பு சிலம்பில் குறிப்பிடப்பெற்றுள்ளது), தமிழில் பாடுவார், நட்டவஞ்செய்வார், பக்கவாத்யர், பாணர்(யாழ் அல்லது வீணை வாசிப்போர்) , வீணைவாசிப்போர் போன்ற கலைஞர்கள் இருந்துள்ளனர். தேவரடியார் ஒருவரின் பெயர் பெரியதேசிச்சி என்பதாகும். இப்பெயர் இவர் தேசி என்னும் கூத்தில் சிறந்து விளங்குவதால் ஏற்பட்டிருக்கக்கூடும் என வெ. மகாதேவன் குறிப்பிடுகிறார். (வெ. மகாதேவன், 2013,ப.293)

**முடிவுரை**

இவ்விதம் தமிழகக்கோயில்கள் இசைக்கலையை வளர்த்த விதத்தினை நாம் கல்வெட்டுகள் வாயிலாக அறிந்தோம். ஆயிரக்கணக்கான கலைஞர்கள். ஆரியம் பாட என தனியேவும் தமிழில் திருப்பதியம் விண்ணப்பிப்போர் என தனியேயும் ஆட்கள் நியமிக்கப்பெற்றுள்ளனர். மற்ற வாய்ப்பாட்டு கலைஞர்களையும் விட தஞ்சாவூர் இராஜராஜேஸ்வரத்தில் திருப்பதியம் விண்ணப்பம் செய்யும் பிடாரர்கள் மட்டுமே 40 பேர் என்று அதிக எண்ணிக்கையில் இருந்துள்ளனர். இதனால் தினமும் கோயிலில் திருப்பதியம் ஓதப்பட்டுள்ளதை அறியலாம்.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**சுட்டு நூல் பட்டியல் விளக்கம்**

**முதல்நிலை கல்வெட்டுச்சான்றுகள்**

Annual Reports on Indian Epigraphy, (ARE) New Delhi: Archaeological Survey of India.
Epigraphia Indica,(EI) New Delhi: Archaeological Survey of India.
Inscriptions of Pudukkottai States, (IPS)
South Indian Inscripitons (SII)New Delhi: Archaeological Survey of India.
Tamil Lexicon, University of Madras, Madras.
Iravatham Mahadevan, Early Tamil Epigraphy from the beginning to the Sixth century A.D., Hardward University, USA, CRE: A publishers, Chennai, 2003,.p.21.

அ. கிருட்டினன், கல்வெட்டியல் வாழ்வியல், மணிவாசகர், பதிப்பகம், 1993, ப.169

*எ.சுப்பராயலு ,கல்வெட்டுச் சொல்லகராதி,சாந்திசாதனா பப்ளிசர்ஸ்,சென்.*2003,ப.426.

வெ. மகாதேவன், தஞ்சை இராஜராஜேஸ்வரத்துக்கல்வெட்டுகள், 2013,ப.293